வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 4416 /ஆ2 /2024 நாள் : 05.04.2024

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டத்தில் 2024 – 2025 ஆம் கல்வியாண்டில் 1 முதல் 8 ஆம் வகுப்புவரை பயிலும் சத்துணவு திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவ / மாணவியர்களுக்கு பள்ளிகளில் சமூக நலத்துறையின் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மூலம் சீருடைகள் அளவு எடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது - மாணவர்களின் பெயர்கள் விடுபட்டுள்ளது / தவறுதலாக உள்ளது போன்ற குறைகளை EMIS இணைய தளத்தில் சேர்க்கை திருத்தம் செய்து பதிவேற்றம் செய்தல் - தொடர்பாக

பார்வை சென்னை.6. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (தொடக்க கல்வி) செயல்முறைகள் ந.க.எண்.57496/இ/இ1/2024 நாள்.05.04.2024.

#######

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு / நிதியுதவி பள்ளிகளில் 2024 – 2025 ஆம் கல்வியாண்டில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் சத்துணவு உண்ணும் மாணவ / மாணவியர்களுக்கு சீருடைகள் தைத்து வழங்க சமூக நலத்துறையின் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் பள்ளிகளுக்கு நேரில் சென்று பயனாளிகளுக்கு அளவு எடுத்து அதன் விவரத்தை EMIS ல் பதிவேற்றம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. அவ்வாறு கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் அளவுகள் எடுக்கும் பணிக்கு நேரில் வரும்போது அப்பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவர்களின் விவரம் தவறுதலாக உள்ளதாகவும் சில மாணவர்களின் பெயர் விடுபட்டுள்ளதாகவும் / சத்துணவு உண்ணும் மாணவர்களின் எண்ணிக்கையும் சீருடை பெறுபவர்களின் எண்ணிக்கையும் தவறுதலாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட குறைகளை நிவர்த்தி செய்வதற்கு தங்கள் பள்ளியில் பயிலும் மாணவ / மாணவியர்களின் விவரங்களை EMIS இணையதளத்தில் எவ்வித எண்ணிக்கை மாறுபாடு

இன்றியும், எவ்வித மாணவர்களின் பெயர்கள் விடுபடாமலும் பதிவேற்றம் செய்வதற்கு ஏதுவாக 05.04.2024 முதல் 08.04.2024 மாலை 04.00 மணிவரை EMIS PORTAL பயன்பாட்டில் (OPEN) இல் இருக்கும் எனவே அனைத்து விவரங்களையும் சரியாக பதிவேற்றம் செய்யப்படவேண்டும். 08.04.2024க்கு பின்னர்மேற்காண் விவரங்கள் சமூக நலத்துறைக்கு வழங்கப்படவுள்ளது. இதில் ஏதேனும் தவறுகள் பின்னர் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியரே முழுப் பொறுப்பேற்க நேரிடும் எனவும் இப்பணிகளை செவ்வனே செய்வதற்கு ஏதுவாக வேலூர் மாவட்டத்திலுள்ள வட்டார வள மைய ஆசிரியர்கள் (BRTES) மற்றும் APO's ஆகியோர் மேற்பார்வை செய்து சரியான விவரங்களை பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளவும் மேலும் தலைமை ஆசிரியர்கள் சான்றில் கையொப்பமிட்டு இவ்வலுவலகத்திற்கு ஆ.2. பிரிவில் ஒப்படைக்க அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இப்பணியில் எவ்வித சுணக்கமும் இன்றி தொய்வும் இன்றி உடனடியாக குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பதற்கு சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு. சான்று

// ஒப்பம் //

// செ.மணிமொழி //

முதன்மைக் கல்வி அலுவலர்,

வேலூர்.

பெறுநர்
தலைமை ஆசிரியர்,
அரசு / நகரவை / நிதியுதவி / தொடக்க / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.